1978 மார்ச் 13]

தில் திணிக்கிறார்கள்? அது கடைசியிலே இந்தியைக் கட்டாய மாக ஆக்க வேண்டுமென்ற அடிப்படையில்தானா என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கட்டாயப் படுத்தப்படவில்லையென்பதும், அது திணிக்கப்படவில்லை என்பதும், திணிக்கப்பட மாட்டாது என்கின்ற உறுதிமொழிகளைத் தந்திருக்கிறார்கள் என்ற சில உண்மைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தியப் பேரரசு மும்மொழி திட்டத்தின்கீழ் இந்தியைப் பயில வேண்டுமென்று சொல்வதைப் போல், வட மாநிலங்களிலே, இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் தமிழை மும்மொழித் திட்டத்தின்கீழ் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தமிழக அரசால் வலியுறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொன்னாலே, பிறகு அவர்கள் சொல்வதை நடத்த வேண்டுமென்ற நிலைமை ஏற்படும் என்பதை மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரவர்களுடைய கவனத்திதிற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள்.

*537 வினா.—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை நகரம், கிழக்கு சட்ட மன்றத் தொகுதியில் எவ்வளவு குடிசைவாழ் மக்கள் உள்ளார்கள்?

(ஆ) அந்த மக்களுக்கு குடிநீர், நடைபாதை, விளக்கு, போன்ற வசதிகள் செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 5,823.

(ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் வழங்க திட்டமிட்டு வேலைகள் நடந்து வருகின்றன:

வேலையின் பெயர்.	திட்டமிட்டுள்ள செலவு. (ரூ. இலட்சத்தில்)
சாலை வசதிக்கு	5.17
குடிநீர் வசதிக்கு	4.40
கழிப்பிடங்கள் மற்றும் சாக்கடை வசதிக்கு.	6.03
தெரு விளக்கு	0.27

[1978 மார்ச் 13

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் என் தொகுதிக்கு வந்து, சில குடிசைப் பகுதிகளை அவரே பார்வையிட்டபொழுது, சுகாதாரமும், குடி தண்ணீர் வசதியும் இல்லாத நிலையை நேரில் கண்டார், சில உத்தரவுகளையும் போட்டார். கோவை நகராட்சி இந்த விஷயத்தில் கவனக் குறைவாகச் செல்வதும், மோசமான சுகாதார நிலை இருப்பதும், பல பகுதிகளிலே தெரு விளக்குகள் கூட போடப்படாமல் இருப்பதும் அமைச்சருக்குத் தெரியுமா? இப்பொழுது பணக்கணக்கைச் சொன்னார். நடைமுறையிலே, துரிதமாக நடவடிக்கை எடுக்க அவர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவைகளையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், விரைவிலே அவைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணிக்கும்.

திரு. கே. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை கிழக்குக்கு அருகில் உள்ளது எனது தொண்டாமுத்தூர் தொகுதி. அந்தத் தொகுதியிலே உள்ள ரத்தினபுரி கணபதி கண்ணப்ப நகர், மணியகாரம் பாளையம், இராமகிருஷ்ணபுரம் கவுண்டன பாளையம், சங்கனூர், சாயப்பா காலனி ஆகிய இன்னும் நூற்றுக் கணக்கான ஊர்களில் இப்படி மின் விளக்கு எரிவதில்லை. பல பகுதிகளில் போக்குவரத்துக்கள் சரியாக இல்லையென்று என்னிடம் நூற்றுக்கணக்கான மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு தெருவில் 200 விளக்குகள் இருந்தால் இரண்டு தான் எரிகின்றன. மற்ற 18 எரிவதில்லை. ஆகவே இது விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் தனது தொகுதியின்மேல் தனி அக்கறை எடுத்துக் கொண்டு தனிக் கேள்வி போட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 9-20]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே கோவை நகராட்சியை ஒட்டியுள்ள சிங்காநல்லூரில் உள்ள குடிசைப் பகுதிகள் மொத்தம் எவ்வளவு? அதை மாற்றி அமைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு உள்ளதா? அந்தப் பகுதியில் முக்கியமாக விளக்கு வசதி, ரோடு வசதி மற்ற வசதிகளை செய்து கொடுக்க ஏற்பாடு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனியாக கேள்வி போடவும் அல்லது தனியாக வந்து கேட்கவும்.